மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

09.08.2022 திங்கட்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

## பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்து சபையை முடக்கியிருந்தால்

# நாடு ஆட்சியை இழந்திருக்கும்



நிறைவேற்று அதிகாரத்தை நசுக்கி ஜனநாயகத்தை பாதுகாத்து சட்ட சபையை முடக்கிய வன்முறையாளர்களை ஒடுக்கிய இராணுவத்தினருக்கு தேசத்தின் புகழுரை உரித்தாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு இன்று (09) முற்பகல் விசேட உத்தியோகபூர்வ விஜயத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி, இராணுவத்தினரை சந்தித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். வன்முறையாளர்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்து சபையை முடக்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும் எனவும் அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை முற்றிலும் வேறாக இருந்திருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் அமைதியான முறையில் நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இராணுவத் தலைமையக வளாகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே வரவேற்றதுடன், பின்னர் ஜனாதிபதிக்கு விசேட இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

02

### போராட்டக்காரர்களை அமைதிப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக,

## சொல்வதை ஜனாதிபதி கேட்க வேண்டும்

**மனித உரிமைகள் கண்காணிப்பகம்**

ஜனாதிபதி அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைத்து இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தனது நிர்வாகம் மேற்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.. பொருளாதார முறைகேடு மற்றும் ஊழலுக்கு எதிராக பல மாதங்களாக பரவலான எதிர்ப்புகளுக்குப் பிறகு அப்போதைய

02

## 6பேர் மரணம்

நாட்டில் மேலும் 6 பேர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். உயிரிழந்தவர்களில் 05 பேர் 60 வயதுக்கு மேற்பட்ட 3 ஆண்கள் மற்றும் இரு பெண்கள் என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மின் கட்டணமும் அதிகரிக்கிறது

நாளை (10) முதல் அமுலுக்கு வரும் வகையில் சராசரியாக 75 சதவீத மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன்படி, இந்த உயர்வின் மூலம் 30 யூனிட் வரை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் மின் கட்டணத்தில் 198 ரூபாய் கூடுதலாக சேர்க்கப்படும். அத்துடன், 60 அலகுகள் வரை பயன்படுத்தும் மின்சார பாவனையாளர்களின் மின் கட்டணத்தில் 200 வீத அதிகரிப்பு ஏற்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## எரிவாயு விலை சூத்திரம்

உள்நாட்டு எரிவாயு விலை தொடர்பில் திருத்தப்பட்ட விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் சமர்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அந்த விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதி உள்நாட்டு எரிவாயுவின் விலையை நிர்ணயிக்க முன்மொழியப்பட்டது.

## உரிய நேரத்தில் தீர்வு கிடைக்காத கல்வியால் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ**



கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையில் பாடசாலை மாணவர்களின் கல்விக்கு பாரிய இடையூறுகள் ஏற்பட்ட காலப்பிரிவாகும் எனவும், சுமார் ஒன்றரை வருடங்களக நீடித்த கோவிட் தொற்று, போக்குவரத்து நெருக்கடி மற்றும் ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் உரிய நேரத்தில் தீர்க்கப்படாமை போன்ற காரணங்களால், சில காலம் பாடசாலைகளை மூட வேண்டியிருந்ததால் அனைத்து

02

## முழுமையாக எரிபொருள் வழங்க தீர்மானம்

பயணிகள் போக்குவரத்துக்கான தனியார் பேருந்துகளுக்கு தேவையான டீசலை முழுமையாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. கடந்த காலங்களில் பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இன்று முதல் முழுமையாக பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்றது. மேலும், இந்த தீர்மானத்தின் மூலம் பல நாட்கள் தொடர்ந்து தங்களது பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியும் என தனியார் பேருந்து ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

## 1000ரூபா நாட்கூலி வழங்க தீர்ப்பு

பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளமாக 1,000 ரூபாயை வழங்குமாறு தீர்ப்பளித்துள்ள உயர்நீதிமன்றம். முதலாளிமார் சம்மேளத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. 1000 ரூபாய் சம்பளம் வழங்கும் அரசாங்கத்தின் யோசனையை இரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 2021 இல் முதலாளிகள் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவே, இன்று (09) தள்ளுபடி செய்யப்பட்டது. அத்துடன், நாட் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை 22 கம்பனிகளுமம் கடைப்பிடிக்கவேண்டும். தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் 1000 ரூபாயை வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

## மயிலந்தனை படுகொலை வழக்கு மீண்டும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்

**(வடமலை ராஜ்குமார்)**

இன்று(09.08.2022) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலந்தனை படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மயிலந்தனை விநாயகர் ஆலயத்தில் உரிய கிராம மக்களால் அனுஸ்டிக்கப்பட்டது. இன்றைய தினம் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான நிதி கோரிய மகஜர் ஒன்றினையும் இலங்கை சனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். அம்மகஜரில், எமது வழக்கு மீண்டும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜ/ரி முறை விசாரணையை நாம் ஏற்க மறுக்கிறோம், சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும், சாட்சிகளின் வழக்கு செலவை அரசு பொறுப்பேற்க வேண்டும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும், மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.




மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலந்தனை படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மயிலந்தனை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற போது

## ஆலயத்தின் புனிதத்துவத்தை பேணி பாதுகாக்க வேண்டும்

**ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை**

( வாஸ் கூஞ்ஞ)



மடு திருத்தலத்துக்கு வருவோர் செபிக்கும் நோக்குடன் வருகை தந்து செபிப்பதன் மூலமாகவும் பயபக்தியுடன் வழிபாடுகளில் கலந்து கொள்வதனாலும் மருதமடு அன்னையின் இந்த ஆலயத்தின் புனிதத்துவத்தை தொடர்ந்து பேணி பாதுகாக்க ஏதுவாகும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு

02

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் இன்று (09) தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு உயர் தர பரீட்சைக்கான பெறுபேறுகள் எதிர்வரும் 15ஆம் திகதி வெளியிட தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் எனினும், கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக செயன்முறை பரீட்சைகளில் தோற்றுவதற்கான திகதி பிற்போடப்பட்டமையால், பெறுபேறுகளை இறுதி செய்வது தாமதமாகியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

## உரிய நேரத்தில் தீர்வு கிடைக்காத கல்வியால்

தர பாடசாலை மாணவர்களாலும் தங்கள் பாடத்திட்டத்தை சரியாக பூர்த்தி செய்ய முடியவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பல பருவ கால பரீட்சைகளை நடத்தாமை, பிரயோக பயிற்சி பரீட்சைகள் தடைபடல்,இணைய கல்வி மூலம் மேலும் கல்வி ஏற்றத்தாழ்வு அதிகரித்தல் போன்றன கல்வித்துறையில் நெருக்கடி தீவிரமடைய காரணமாக அமைந்துள்ளதால் இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சைக்கு முகம்கொடுக்கும் மாணவர்கள் இப்பிரச்சினைகளால் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இந்நிலைமையால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாது என்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய(09) பாராளுமன்ற அமர்வில் 27ஃ2 இன் கீழ் கேள்வி எழுப்பினார்.

## ஜனாதிபதி அவர்கள் சொல்வதை கேட்க வேண்டும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை அடுத்து, ஜ•லை 21, 2022 அன்று விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். பல ஆண்டுகளாக தவறான நிர்வாகம் மற்றும் உரிமை மீறல்களைத் தொடர்ந்து இலங்கை அரசியல், பொருளாதார மற்றும் மனித உரிமைகள் நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடுதல்உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து, பாதுகாப்புப் படைகளின் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அதே வேளையில், தகுந்த சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுத்து, நிலவும் ஊழலைக் கையாள்வதன் மூலம் பொதுமக்களை மேலும் சிரமங்களிலிருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

"ஜனாதிபதி விக்கிரமசிங்க பாரிய சவால்களை எதிர்கொள்கிறார், ஆனால் கடுமையான அவசரகாலச் சட்டங்களை விதிப்பது, போராட்டத் தலைவர்களை அரசியல் ரீதியாக உந்துதல் கொண்டு கைது செய்தல் மற்றும் செயற்பாட்டாளர் குழுக்களின் தீவிர கண்காணிப்பு ஆகியவை இலங்கையின் பயங்கரமான பிரச்சினைகளைத் தீர்க்காது" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார். "அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை கடைப்பிடித்து நெருக்கடிக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்தால் மட்டுமே சர்வதேச பொருளாதார உதவி பயனுள்ளதாக இருக்கும் என்பதில் இலங்கையின் பங்காளிகள் தெளிவாக உள்ளனர்."

ஜ•லை 18 அன்று, விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தை விதித்தார், இது பாதுகாப்புப் படைகளுக்கு பெரும் அதிகாரங்களை அளிக்கிறது, பல அடிப்படை உரிமைகளை இடைநிறுத்துகிறது மற்றும் சிறிய அல்லது தெளிவற்ற வரையறுக்கப்பட்ட குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகளை விதிக்கிறது. பதவியேற்ற ஒரு நாளுக்குப் பிறகு, விக்கிரமசிங்க, மத்திய கொழும்பில் பல மாதங்களாக ஆக்கிரமித்திருந்த இடத்தில் இருந்து எதிர்ப்பாளர்களைகலைக்ககாவல்துறை மற்றும் இராணுவத்தை அனுப்பினார். வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் தாக்கப்பட்டு காயமடைந்தனர். அதிருப்திக்கு எதிராக நடந்து வரும் ஒடுக்குமுறையின் போது, அதிகாரிகள் குறைந்தபட்சம் 30 போராட்ட அமைப்பாளர்களை தடுத்து வைத்துள்ளனர், பல சந்தர்ப்பங்களில் வாரண்ட் இல்லாமல் அல்லது சிவில் உடையில் அதிகாரிகளைப் பயன்படுத்தி உரிய நடைமுறையின்றி கைது செய்தனர். மே மாதம், இலங்கை தனது வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை, அரசாங்கம் தற்போது கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் **(IMF)** பிணையெடுப்பு பற்றி பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கிறது. பொருளாதார நெருக்கடி, எரிபொருள் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு மற்றும் பணவீக்கம் அதிகரித்து, மில்லியன் கணக்கான மக்களை வறுமையில் தள்ளியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு விடுத்துள்ள பரிந்துரைகளில்: பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் மக்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகவும் அமைதியாகவும் வெளிப்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தவும்

தெளிவற்ற, மிகையான பரந்த மற்றும் விகிதாசாரமற்ற அல்லது அடிப்படை உரிமைகளை மீறும் அவசரகால ஒழுங்குமுறை விதிகளைத் திரும்பப் பெறுதல்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் (ீவுயு) உரிமைகளை மதிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இயற்றப்படும் வரை முறையான தடையை அறிவிக்கவும், மற்றும் ீவுயு இன் கீழ் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்கவும் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளிலிருந்து அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்க போதுமானதாக இருக்கும் மற்றும் தவறான நிர்வாகம் மற்றும் ஊழலைத் தடுக்க வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய சமூக பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல் ஊழல் நிதிகளுக்கான பாதுகாப்பான புகலிடங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் கூட்டு முயற்சியில் திருடப்பட்ட சொத்து மீட்பு முயற்சியில் இலங்கையின் பங்கேற்பை மீண்டும் தொடங்குதல் மற்றும் ஐஆகு உடனான உடன்படிக்கையின் ஒரு பகுதியாக அவ்வாறு செய்ய உறுதியளிக்கிறது் மற்றும்

கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் உயர்மட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, அதற்குப் பொறுப்பானவர்களை உரிய முறையில் தண்டிக்க வேண்டும்.

"சமீபத்திய மாதங்களில், சீர்திருத்தம், ஊழலுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல இலங்கையர்கள் தைரியமாக தெருக்களில் இறங்கினர்" என்று கங்குலி கூறினார். "போராட்டக்காரர்களை அமைதிப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக, ஜனாதிபதி விக்கிரமசிங்க அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்.

## பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்து சபையை முடக்கியிருந்தால் நாடு

ஜனநாயகத்தை பாதுகாக்கும் உன்னத இடமான பாராளுமன்ற வளாகத்துக்குள் வன்முறையாளர்கள் பிரவேசிப்பதை வெற்றிகரமாக தடுத்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்த 03 பிரதான நிறுவனங்கள் உள்ளன. பாராளுமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை. இந்த 03 நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், இந்த நாடு கட்டுப்பாட்டை இழக்கும். அரசியலமைப்பு சிதைகிறது.

ஜனநாயகம் இழந்துவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நீங்கள் பாராளுமன்றத்தை பாதுகாத்தீர்கள்.

நாடாளுமன்றம் வீழ்ந்தால் அரசியல் சாசனம் பறிபோகும். எனவே, அவ்வேளையில் பாதுகாப்புச் சபையின் தலைவர்களிடம் குறிப்பாக சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லியனகே ஆகியோரிடம் பாராளுமன்றத்தைப் பாதுகாக்குமாறு கூறினேன். நாடாளுமன்றத்தை இழந்தால் ஆட்சி பறிபோகும். நாடாளுமன்றம் இல்லாததால், பாதுகாப்பு அமைச்சகத்தை அமல்படுத்த முடியாது. அதனால்தான் எல்லோரையும் நம்பி அந்த வேலையைச் செய்தார்கள்.

அதன்படி பாராளுமன்றத்தை கைப்பற்ற வந்தவர்களை சுட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களில் பலர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பு இருந்ததால் அடுத்த நாளே நாட்டில் நிலைமை மாறியது. பாராளுமன்றம் பாதுகாக்கப்படாவிட்டால் இன்று நாட்டில் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் இந்தப் படையை உருவாக்க வேண்டும் என்று விவாதித்தோம்.

அதே நேரத்தில், நான் அக்டோபர் மாதம் லண்டன் சென்றேன். நான் லண்டனில் ஜெனரல் மைக்கேல் ரோஸை சந்தித்தேன். அவரை எனக்கு அறிமுகப்படுத்தியது ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ. ஜெனரல் ரணதுங்க மற்றும் ஜெனரல் அடிகல ஆகியோர் அவருடன் இருந்தனர். அப்படி ஒரு பிரிவைத் தொடங்க வேண்டும் என்றார். அப்போதைய இராணுவத் தளபதி திரு.வைத்தியரத்னவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது, பின்னர் ஜெனரல் ஜெரி சில்வா படையை ஆரம்பித்து இந்தப் பணியை சிறப்பாகத் தொடர்ந்தார். குறிப்பாக அப்போது தொடங்கியதை தொடர்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ், பாதுகாப்பு செயலாளர் நாயகம் கமல் குணரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஆலயத்தின் புனிதத்துவத்தை பேணி பாதுகாக்க வேண்டும்

இம்மானுவேல் பெனாண்டோ ஆ ண்டகை இவ்வாறு தெரிவித்தார்.ஆவணி மாத மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தலைமையில் மடுத் திருப்பதியில் செவ்வாய் கிழமை (09) நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இன்று செவ்வாய் கிழமை (09.08.2022) மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தலைமையில் மடுத் திருப்பதியில் எதிர்வரும் ஆவணி மாதத்துக்கான மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு கூட்டம் இங்கு இடம்பெற்றது. இங்கு நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக நாங்கள் மக்களுக்கு தெரிவிப்பதாவது –தற்பொழுது இவ் விழாவை முன்னிட்டு 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் இவ் விழாவுக்காக வந்துள்ளனர். இங்கு அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் யாவும் பக்தர்கள் தங்குவதற்காக தன்னகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பல நூற்றுக்கணக்கான கூடாரங்கள் அமைத்து பலர் இங்கு தங்கியுள்ளனர் இவற்றுடன் மேலும் பெருந் தொகையான பக்தர்கள் வருகை தருவதற்கு இருப்தாக தெரிய வந்துள்ளது. எதிர்வரும் 11 ந் திகதி போயா தினமாக இருப்பதாலும் 14 ந் திகதி ஞாயிற்றுக் கிழமையாக இருப்பதாலும் பலர் இங்கு வர இருப்பதாக நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இவ்வாறான ஒரு இடத்தில் மக்கள் ஒன்றுகூடும்போது நாங்கள் அவர்களின் ஆரோக்கியத்தையும் அவசியம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இக்கூட்டத்தில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தது போன்று இவ் சூழலில் முகக் கவசம் அவசியம் அணிய வேண்டும். இவ் முகக்கவசம் அணிவதன் மூலம் எம்மையும் பாதுகாத்து மற்றவர்களையும் பாதுகாக்க ஏதுவாகும்.

அத்துடன் நாம் மடுத்திருப்திக்கு வருவது செபிக்கவும் நாம் கலந்து கொள்ளும் வழிபாட்டில் பக்தியுடன் ஈடுபடுவதால் இவ் திருத்தலத்தில் ஒரு புனிதத்துவம் ஏற்படுகின்றது. பல பக்தர்கள் இவ் விழாவில் கலந்து கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் மக்கள் தங்கள் இல்லங்களிலிலேயே இருந்துகொண்டுஇவ்ஆவணிதிருவிழாத்திருப்பலியை ஆவணி 15 ந் திகதி காலை 6.15 மணியிலிருந்து நேரலையாக 'தெரண' தொலைக்காட்சியில் பார்த்து இவ் விழாவுடன் இணைந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

# இந்துக்கலைக்கூடமும், அருங்காட்சியகமும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட இந்து நாகரீகத்துறையில் இந்துக்கலைகூடமும், அருங்காட்சியகமும் திறப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை(10) இடம்பெறவுள்ளது.

கிழக்குப்பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையிலும், இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் துணைத்தலைமையில், யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப்பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, பேராசிரியர் சி.மௌனகுரு முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் திபின்.பீ.ஆர், விசேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் க.கருணாகரன், சிறப்பு அதிதியாக கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கென்னடி உள்ளிட்ட அதிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.




"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"
அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்





விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)

# சிறுபான்மையினரின் கருத்துக்கள் வலுவடையும்

சர்வகட்சி ஆட்சிமுறை நடைமுறையில் இருந்தால் சிறுபான்மையினரின் கருத்துக்கள் வலுவடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.



தற்கால நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், அரசு எதிர்நோக்கிய, மக்கள் எதிர்நோக்குகின்ற விடயங்கள் முன்னேற்ற கரமாக கையாள ஆரம்பித்துள்ளதால் மெதுமெதுவாக நல்ல சமிஞ்ஞைகளை காணக் கூடியதாக உள்ளது. இது எந்தளவிற்கு பொருளாதாரப் பிரச்சினைகளையும், அரசு எதிர்நோக்கிய ஏனைய விடயங்களையும், மக்கள் பாதிக்கப்படுகின்ற விடயங்களையும் எந்தளவிற்கு தீர்த்து வைக்கும் என்னும் கேள்வி மக்கள்மத்தியில் எழத் தொடங்கி உள்ளன. மக்களால் வெகுஜன ரீதியாக வன்முறையற்ற முறையில் மேற்கொள்ளப்படுகின்ற ஜனநாயகப் போராட்டத்தை பல சட்டங்களை உருவாக்கியும் அரச பயங்கர வாதத்தைக் கொண்டும் அடக்க முயற்சித்து அரசு எதிர்நோக்குகின்ற ஏனைய மக்கள் பாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்கு முன்னேற்றகரமாக அரசு செயற்படுகின்ற நிலையில் சர்வகட்சி ஆட்சிமுறை ஊடாக வேலைகளைச் செய்வதற்கு அரசியல்கட்சிகள் ஒத்துழைக்குமா?

எமது நாட்டைப் பொறுத்தவரையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசியற்கட்சிகள் எந்தளவிற்கு ஒத்துழைக்கும் ஏனனில்கட்சிகளுக்குள் எழுந்துள்ள கொள்கை ரீதியான முரண்பாடுகள், ஊழல் மோசடி, தனிநபர்முரண்பாடு, வெளிநாட்டு கொள்கைகள், கடந்த கால கசப்பான அனுபவங்கள் அத்தனையும் மறந்து சர்வ கட்சி ஆட்சி நிலை நிறுத்தப்படுமா? கேள்விக்குறியாக சர்வகட்சி ஆட்சி முறைமாறும் அப்படி சர்வ கட்சிப் பிரதிநிதிகள் பங்களிப்புச் செய்வதற்கு தூரத்தில் இருந்துகொண்டு சம்பிரதாய ஒத்துழைப்பை மட்டும் வழங்குவார்கள். தற்சமயம் நடந்து முடிந்த பிரச்சினைகளுக்கும், இனப் பிரச்சினைக்கும்சம்பந்தம் உண்டா இனிமேலாவது இனப் பிரச்சினைக்கான கலந்துரையாடல் மேற் கொள்ளப்படுமாவடகிழக்கு மக்கள் தற்சமயம் உள்ள சூழ்நிலையில் தங்களது உரிமைகளையும், தேவைகளையும்மக்கள் பிரதிநிதிகள் பூர்த்தி செய்ய விரும்புகின்றனர். இதேவேளை வடக்கு கிழக்கில்தமிழ்த்தேசியத்திற்கு சமனாக அபிவிருத்தி மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள் தனிநபர்தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென மக்கள் உள்ள நிலையில் 22பாராளுமன்ற மக்கள்பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் தற்சமயம் அரைக்கு அரைவாசி வாக்குகள்பிரிந்து அபிவிருத்திக்கும். தமிழ்த் தேசியத்திற்கும் பிரதிநிதிகள் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவே மக்கள் பிரதிநிதிகள் தேசியத்தையும், மக்களின் தேவைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு வாக்குகள் பல வகையாக பிரிவதற்கு தற்சமயம் அடித்தளம் போடப்படுகின்றன. என்றார்.

# வன்முறை தீவிரவாதம் இல்லாது ஒழிப்பதற்கான விழிப்புணர்வு





(வாஸ் கூஞ்ஞ)

நாட்டில் இன்றைய காலக்கட்டத்தில் வன்முறை தீவிரவாதம் மலிந்து வரும் இவ்வேளையில் இவற்றை இல்லாதொழிப்பதற்காகவும் நாட்டில் உள்ள சிவில் அமைப்புககின் ஆற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் தேசிய சமாதான பேரவை மற்றும் பிரதேச தொடர்பாடல் பயிற்சி நிலைய உறுப்பினர்கள் ஒன்றினைந்து பல வேலைத் திட்டங்களை நீண்ட காலமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய பல இன சமய மக்கள் வாழும் மன்னார் மாவட்டத்தில் வன்முறை தீவிரவாதம் தலை தூக்கக் கூடாது என்ற தூரநோக்கு சிந்தனையில் பல திட்டங்களை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் ஒன்றாக தற்பொழுது தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் பிரதேச தொடர்பாடல் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் இதன் திட்ட இணைப்பாளர் ஜசோதரன் தலைமையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வீதி நாடகங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகள் தனி நபர்களால் உருவாகும் சண்டை சச்சரவுகள் குழு சண்டைகளாக மாற்றி அதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை மையப்படுத்தி அமைக்கப்பட்ட நாடகமானது அரங்கலய நாடகக் குழுவினால் காண்பிக்கப்பட்டது.

இவ் வீதி நாடகங்கள் கடந்த இரு தினங்களாக அதாவது ஞாயிறு, திங்கள் (07 , 08.08.2022) ஆகிய தினங்கள் மன்னார் நகர் பகுதியில் பள்ளிமுனை , உப்புக்குளம் , மன்னார் பிரதேச செயலக வளாகப் பகுதிகளிலும் இடம்பெற்றன. இவ் நிகழ்வுகளில் பொது மக்கள் பலர் உட்பட மன்னார் சர்வமத குழுவினர் சமூக செயற்பாட்டாளர்கள் மதத் தலைவர்கள் அரச உத்தியோகத்தர்கள் பொலிசார் என பலர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# தேசியத்தில் சாதனை



இலங்கை கூட்டுறவு சபையினால் நடாத்தப்பட்ட பேச்சு போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கல்வி பயிலும் பத்மநாதன் கோபிகா தேசிய மட்ட போட்டியில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளார்.

இலங்கை கூட்டுறவு சபையின் 100 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இப்போட்டி நடாத்தப்பட்டது. இதில் முதலாம் பிரிவில் பங்கேற்ற குறித்த மாணவி மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்ட போட்டியில் பங்கேற்று மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளார்.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் மேலும் இரு மாணவர்கள் இரண்டாம் பிரிவில் பங்குகொண்டு மாவட்டமட்டத்தில் இரண்டாமிடத்தினையும், 3ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குருதிக் கொடைக்கு அழைப்பு

(சுதா)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி எதிர்நோக்கும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் மக்கள் தம் உதிரத்தினை கொடுத்து எமது உடன்பிறப்புகளின் உயிரைக்காக்க முன் வரவேண்டுமென மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது. போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினால் தினமும் சராசரியாக 40 முதல் 50 பைன்ட் உதிரம் அவசர தேவையுடைய நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போதைய சூழ்நிலையில் இரத்தவங்கியில் குறைந்த அளவிலான உதிரம் மட்டுமே கையிருப்பில் உள்ளதாக வைத்தியசாலையில் கடமையாற்றும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். முன்பு 700 தொடக்கம் 800 பைன்ட் உதிரம் சேமித்து வைக்கப்பட்டு இருந்து வந்தள்ளமை குறிப்பிடத்தக்கது. தானத்தில் சிறந்த தானம் இரத்ததானம் எனும் அடிப்படையில் ஒரு மனித உயிரினை காப்பாற்றும் பொறுப்பு சக மனிதனின் கடமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல தடவை உதிரம் வழங்கியுள்ள போதிலும் தற்போதைய தேவை கருதி மீண்டும் அவர்கள் இரத்ததான முகாம்களை நிறுவி உதிரத்தினை சேகரிக்க முன்வரவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன், உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உன்னத பணியினை இளைஞர், யுவதிகள் அனைவரும் இணைந்து நிறைவேற்ற முன்வர வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஊடகவியலாளர்களுக்கு உதவி



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிக்க இச்சூழலில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டு மக்களின் செய்திகளை சமூகப் பொறுப்போடு சம்பந்தப்பட்டவர்களுக்கு கொண்டு செல்லும் பல்வேறு ஊடகங்களில் பிராந்திய செய்தியாளர்களாக களப் பணியாற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலரும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலைமையை கருத்தில் கொண்டு நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான " சமூகஜோதி" வாமதேவன் தியாகேந்திரனிடம் மட்டக்களப்பு கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மாவட்டத்தில் ஊடகவியலாளர்களாக களப்பணியாற்றும் தெரிவு செய்யப்பட்ட 30 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு ஊக்கப்படுத்தும் முகமாக தலா பத்தாயிரம் ரூபாய் (10,000) வீதம் அன்பளிப்பு தொகை வழங்கி வைக்கப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விஷேட வேலைத்திட்டத்தின் கீழ் கல்குடா மீடியா போரம் – மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்மைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைவாக இவ் அன்பளிப்பு தொகையினை வழங்கும் நிகழ்வு கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் ஏறாவூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் திருமதி நிஹாராமௌஜ/த், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் எம்.எல்.எம்.என். நைறூஸ், ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம். நளீம், உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸினால் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திறன் விருத்தி பயிற்சிப்பட்டறை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கெல்விட்டாஸ் மற்றும் **GCERF** நிறுவனங்களின் நிதி அனுசரனை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் பங்குபற்றலுடன் **AMCOR** தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் அமுல்படுத்தப்படும் 'இளைஞர்கள் மத்தியில் வன்முறை தீவிரவாதத்தை இல்லாதொழித்தல்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறன் விருத்தி செயற்பாடுகள் உட்பட பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கான மூன்றுநாள்வதிவிடபயிற்சிப்பட்டறை தன்னாமுனை மியானி மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் பி.விவேகானந்தன், கெல்விட்டாஸ் நிறுவன திட்ட உத்தியோகத்தர் ரமேஷ், யுஆஊழுசு நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ப.முரளிதரன் மற்றும் **AMCOR** நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் யோ.சிவயோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சிப்பட்டறையானது இறைவணக்கம், மங்கள விளக்கேற்றல் மற்றும் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. இப்பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக ளுடுஊனுகு நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பொறுப்பாளர் ஆறுமுகம் சொர்ணலிங்கம், அம்கோர் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ப.முரளிதரன், சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் யோ.சிவயோகராஜன் ஆகியோரால் பல்வேறு தலைப்புக்களில் இம்மாணவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. இதேபோன்று 10 பயிற்சிப்பட்டறைகள் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளதுடன் இதன் மூலம் 200மாணவர்கள் பயனடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலயடிவேம்பு பிரதேசத்தில் வீடுகள் புனரமைப்பு

(வி.சுகிர்தகுமார்)

சுபீட்சத்தின் நோக்கு எனும் கருப்பொருளுக்கமைய 2022ஆம் ஆண்டின் சமுர்த்திசௌபாக்கியா தேசிய வேலைத்திட்டம் சமுர்த்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதன் அடிப்படையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் தலா 650000ரூபா நிதிஒதுக்கீட்டில்3 முழுமையான வீடுகளும் தலா 225000 ரூபா நிதி ஒதுக்கீட்டில்3 புனரமைப்பு வீடுகளும் தலா 125000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் 3 புனரமைப்பு விடுகளும் அமைக்கப்படவுள்ளன. இதன் ஒரு கட்டமாக இன்று சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.சிவப்பிரியா தலைமையில் ஆலையடிவேம்பு தெற்கு சமுர்த்தி வலயத்திற்குட்பட்ட இரு வீடுகளின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டன.



நிகழ்வில் ஆலையடிவேம்பு தெற்கு வலய முகாமையாளர் ரி.கவிதா கருத்திட்ட உதவியாளர் வி.சந்திரகுமார் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.பி. ராஜஸ்ரீமற்றும் எஸ்.மதனிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி அணி



(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாண ஹொக்கி அணிகளுக்கிடையிலான போட்டியில் அம்பாறை மாவட்ட அணியான காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி 8–7 என்ற கோல்களால் வெற்றிவாகை சூடி கிழக்கு மாகாண சாம்பியனாக மீண்டும் தெரிவாகியுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி தெரிவாகியுள்ளது. இம் மாகாணமட்ட போட்டி நேற்று முன்தினம் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

முதல் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும் திருகோணமலை மாவட்ட அணியும் மோதின. அதில் 2–1 என்ற கோல் வித்தியாசத்தில் திருகோணமலை அணி வெற்றி பெற்றது. நடப்பு சாம்பியனான அம்பாறை மாவட்ட அணி பை மூலம் நேரடியாக இறுதி போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது. இரண்டாவதும் இறுதியுமான போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியும் அம்பாறை மாவட்ட அணியும் மோதின.

48 நிமிட இறுதிப்போட்டி முடிவில் இரண்டு அணிகளும் ஒரு கோல்களும் போடாமல் சம நிலையில் இருந்தன. பெனால்டி தண்டனை உதை முறைமூலம் முதல் தொகுதியில் 4–4 பெற்று மீண்டும் சமநிலையில் இரு அணிகளும் இருந்தன. பின்னர் இரண்டாம் தொகுதி அதாவது தனிநபர் தண்டனை உதைமுறைமூலம் 4–3 என்ற அடிப்படையில் அம்பாறை மாவட்ட அணி வெற்றி வாகை சூடியது. மொத்தத்தில் இறுதியாக 8–7 கோல் வித்தியாசத்தில் அம்பாறை அணி அதாவது காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி வெற்றி வாகை சூடியது . இதன் மூலம் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்டத்திலும் ,கிழக்கு மாகாணத்திலும் நான்கு தடவைகள் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறது காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி. காரைதீவு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் விஜயரெத்தினம் பாஸ்கரன் ஹொக்கி அணியுடன் சமுகமளித்திருந்தார்.

அம்பாறை மாவட்ட அணியை முற்றிலும் த.லவன் தலைமையிலான காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி பிரதிநிதிப்படுத்துவதும் சமகால அணிக்கு சந்துரு தலைவராக செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. நான்காவது தடவையாகவும் வெற்றி வாகை சூடி சாதனை படைத்தமையையிட்டு ஹொக்கி லயன்ஸ் அணியின் ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா மா.சிதம்பரநாதன் தி.உமாசங்கரன் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். எதிர்வரும் மாதத்தில் தேசிய மட்ட ஹொக்கி போட்டி கொழும்பில் நடைபெற இருக்கின்றது.

# குறைந்தது நீண்ட வரிசை



எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் எரிபொருள் நிலையங்களில் QR கோர்ட் முறைப்படி எரிபொருள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் நீண்ட வரிசைகளை காண முடியாதுள்ளது. அரசினால் நிர்ணயிக்கப்பட்ட பணத்தொகைக்கேற்ப எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் சிறப்பான முறையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டத்தில் பிரதேச செயலக ஊழியர்களும் பொலிசாரும் மற்றும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

# 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல்

(வடமலை ராஜ்குமார்)

“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் ஒன்பதாவது நாள் போராட்டம் மன்னார் மாவட்டத்தின் தோட்டவெளி பிரதேசத்தில் இன்று(09.08.2022) இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள்,சிவில் சமூக அமைப்பினர் ,பெண்கள் அமைப்பினர் மற்றும் செயற்பாட்டாளர் என 120 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி நின்றனர்.

நாளைய தினம்(10.08.2022) 10 நாள் போராட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









“வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்”

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா – 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# “செகண்ட் ஷோ” திரைப்படம் வெளியீடு

இலங்கை சினிமாவின் மக்கள் நட்சத்திரம் ஹேமல் ரணசிங்க நடிகராக நடித்த தமிழ் திரைப்படமான “செகண்ட் ஷோ” எனும் திரைப்படமானது திருகோணமலை நெல்சன் திரையரங்கில் நேற்று (08) திரையிடப்பட்டது. இத் திரைப்படமானது இலங்கையில் உள்ள டார்க் ரூம் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள சிவா பிரதர்ஸ் இணைந்து இப் படம் தமிழ் மூலமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை நடிகர் ஹேமல் ரணசிங்க மற்றும் தமிழ் நாட்டினை சேர்ந்த நடிகை மற்றும் சிலரை கொண்டு இலண்டனில் காட்சி படத் தயாரிப்பு அனைத்தும் ஒளி வடிவமாக பெறப்பட்டு திரைப்படமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கான ஒரு விழிப்புணர்வு திரைப் படமாக இது எடுத்துக்காட்டுகிறது. பெண்கள் என்பது பாலியலுக்காக மாத்திரமன்றி மற்றும் போதை பழக்கமே ஒரு ஆணை பெண்ணின் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கு தூண்டுகிறது என பல விழிப்புணர்வுகளை சமூக மட்டத்தில் நடக்கும் சம்பவங்களை மையமாக வைத்து பல கதாபாத்திரங்களுடன் இத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலையை சேர்ந்த சகோதர மொழி இளைஞர் யுவதிகள்,தமிழ் பேசும் இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்து கொண்டு இத் திரைப்படத்தை கண்டு கழித்ததுடன் திரைப்பட கதாநாயகன் இலங்கை நடிகர் ஹேமல் ரணசிங்க, டாக் ரூம் படத் தயாரிப்பின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் கௌசல்யா விக்ரமசிங்க, சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பாடசாலையில் குளவி கொட்டுக்கு இலக்காகி

# மூவர் வைத்தியசாலையில்

**(வாஸ் கூஞ்ஞ)**

கடும் காற்று காரணமாக பாடசாலை ஒன்றில் அமைந்திருந்த குளவி கூடு களைந்தமையால் ஆசிரியர் மாணவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ் சம்பவம் மஸ்கெலியா சமனெளிய பாடசாலை ஒன்றில் திங்கள் கிழமை (08.08.2022) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது மஸ்கெலியா சமனெளிய சிங்கள பாடசாலை ஒன்றில் குளவி கூடு அமைத்திருந்துள்ளது. அப்பகுதியில் திங்கள் கிழமை (08.08.2022) காலை இடம்பெற்ற கடும் காற்று காரணமாக அவ் குளவி கூட்டிலிருந்து குளவிகள் களையத் தொடங்கியுள்ளன. இதனால் அவ் பாடசாலையில் ஒரு வகுப்பில் கற்பித்தல் நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒரு ஆசிரியர் இரு மாணவர்கள் இவ் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள் மூவரும் உடன் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தற்பொழுது மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதைத் தொடர்ந்து ஏனைய மாணவர் ஆசிரியர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகாதிருக்க உடன் மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல்விழாவை ஒட்டி வள்ளியம்பாள் ஆலயம் முன்றலில் நேற்று(8) திங்கட்கிழமை காலை தீமிதிப்பு இடம்பெற்ற போது... **படங்கள் காரைதீவு சகா**

## ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

# கும்பம் சொரிதலுடன் நிறைவு





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு கல்லடி உப்போடை – நெச்சிமுனை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் வங்கக் கடலில் கும்பம் சொரிதலுடன் நேற்று நிறைவுபெற்றது. மட்டக்களப்பு கல்லடி உப்போடை – நெச்சிமுனை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த (31) திகதி திருக்கத்தவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 8 நாட்கள் சிறப்பான முறையில் உற்சவங்கள் நடைபெற்றது. பக்தர்கள் மடிப்பிச்சை எடுத்தல் மற்றும் நெல்லுக்குற்றுதல் சடங்குகளைத் தொடர்ந்து நேற்றைய தினம் விநாயகர் பானை மற்றும் பள்ளையப்பானை என்பன வலம்வருதல் இடம்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு பள்ளையம் படைத்து கன்னிமார் பூசை என்பன இடம்பெற்றதுடன், அம்பாளின் திருக்கும்பங்கள் வங்கக் கடலில் சொரியப்பட்டதனைத் தொடர்ந்து ஆலய வருடாந்த உற்சவம் நிறைவுபெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து நாளை வைரவர் பூசை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




“தா” என்றால் “இந்தா” என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)